தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.38
UGC Approved by Transparent Peer Review

# Cattle Raid and Retrieval in Villi Bharatham

**S. Deepalakshmi[1*], Dr. G. Padmanabhan[2],**
[1]Ph.D. Research Scholar (Part-Time),
Department of Tamil Language and Translation Studies,
Dravidian University, Kuppam – 517426, Andhra Pradesh.
**ORCID iD**: 0009–0009–4654–1631
[2]Associate Professor, Department of Tamil Language and Translation Studies,
Dravidian University, Kuppam – 517426, Andhra Pradesh.
Mail ID: padman.tamil@gmail.com
[*]Corresponding Author Email: deepalakshmikesavan@gmail.com.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 20-July-2026

## ABSTRACT

In the Tamil literary tradition, the raiding (capturing) and retrieving of cattle hold a significant place among warfare methods belonging to the Purathinai (outer/war ethics) tradition. Tamil grammatical texts, namely the Purathinaiyiyal of Tolkappiyam and Purapporul Venbamalai, codify these traditions through the poetic themes (thinai) of Vetchi (cattle raiding) and Karanthai (cattle retrieval).

This paper aims to investigate where the occurrences of cattle raiding and cattle retrieval are found within Villi Bharatham, a prominent Tamil adaptation of the Mahabharata. Furthermore, this study demonstrates how the events of cattle raiding and retrieval depicted in Villi Bharatham align with the grammatical rules and traditions articulated in Tolkappiyam and Purapporul Venbamalai.

***KEYWORDS:*** *Tolkappiyam, Purapporul Venbamalai, Vetchi, Karanthai, Cattle Raiding (Aanirai Kavarthal), Cattle Retrieval (Aanirai Meettal), Villi Bharatham, Arjuna, Virata Kingdom, Trigarta Kingdom.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

# வில்லிபாரதத்தில் நிரை கவர்தலும் மீட்டலும்

[1]**சு. தீபலட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்), தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் – 517426, ஆந்திர மாநிலம்.

[2]**முனைவர் கு. பத்மநாபன்,** இணைப் பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் – 517426, ஆந்திர மாநிலம்.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய மரபில் ஆநிரை கவர்தலும் மீட்டலும் என்பது புறத்திணைக்குரிய போர் முறைகளில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. தமிழ் இலக்கண நூல்களான தொல்காப்பியப் புறத்திணையியலும், புறப்பொருள் வெண்பாமாலையும் வெட்சி மற்றும் கரந்தைத் திணைகளின் வாயிலாக இம்மரபுகளை இலக்கணப்படுத்துகின்றன. தமிழின் பாரத நூலான வில்லிபாரதத்தில் ஆநிரை கவர்தல் மற்றும் ஆநிரை மீட்டல் ஆகிய நிகழ்வுகள் எங்கெங்கு காணப்படுகின்றன என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமையவுள்ளது. மேலும், வில்லிபாரதத்தில் இடம்பெறும் ஆநிரை கவர்தல் மற்றும் மீட்டலுக்கான நிகழ்வுகள் தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்கள் கூறும் இலக்கண மரபோடு எங்ஙனம் பொருந்தி வருகின்றன என்பதை எடுத்துரைப்பதாகவும் இக்கட்டுரையானது அமையவுள்ளது.

**திறவுச் சொற்கள்:** *தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சி, கரந்தை, ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல், வில்லிபாரதம், அருச்சுனன், விராட தேசம், திரிக்கர்த்த தேசம்*

**முன்னுரை**

ஒவ்வொரு காலத்திலும் தோன்றும் இலக்கியங்கள் அந்தந்த கால சமுதாய வாழ்வியலின் பாடுபொருளை மையமாகக்கொண்டு அமைகின்றன. பழந்தமிழர் அகவாழ்க்கை, புறவாழ்க்கை எனப் பாகுபடுத்தி வாழ்ந்தனர் என்பதை அக்காலத்து இலக்கியங்கள் நமக்குப் பறைசாற்றுகின்றன. பண்டையத் தமிழரின் போர் மற்றும் வாழ்க்கை முறையுடன் தொடர்புடைய ஒரு முக்கியச் செயல்பாடாக விளங்குவது ஆநிரை கவர்தலும் அதனை மீட்டலும் ஆகும். பகைவர் நாட்டின் மீது போர் செய்யக் கருதும் மன்னன் முதலில் அந்த நாட்டின் செல்வங்களாகக் கருதப்படும் ஆநிரைகளைக் கவர்ந்து வருவதும், அதனைப் பகைநாட்டினர் தடுத்துப் போரிட்டு மீட்பதும் ஆகிய செயல்களே போரின் தொடக்கமாக அமைகின்றன. இத்தகைய ஆநிரை கவர்தலும், மீட்டலுமாகிய புறத்திணைக் கூறுகள் எங்ஙனம் வில்லிபாரதத்தில் இடம்பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை

, | Copyright © Author(s)

ஆராய்கிறது. மேலும், அவை தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலையோடு ஒப்பிடும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**நிரை கவர்தலும் மீட்டலும்**

அ-பசு, நிரை-கூட்டம். ஆநிரை என்பதற்கு பசுக்கூட்டம் என்பது பொருள்.[1] பண்டையக் காலம் முதலே தமிழ் மக்கள் ஆநிரைகளைத் தங்களது பெரும் செல்வமாகக் கருதி வருகின்றனர். எனவே தான் வீரத்தை வெளிப்படுத்தும் பொருட்டோ, பொருளாதார தேவையின் காரணமாகவோ, பகைவர் முன் தன்னை உயர்த்தி தனது நாட்டை விரிவுபடுத்துவதற்கோ பகைவர் மீது போர்த் தொடுக்கக் கருதிய தலைவன் முதலில் அந்நாட்டின் செல்வங்களாகிய பசுக்களைக் கவர்ந்துவர முற்படுகிறான். அந்தவகையில் பகைவரின் ஆநிரைகளைத் தங்களது நாட்டில் மேய்ந்துக் கொண்டிருக்கும் போதோ அல்லது பகைவரின் நாட்டிற்கே சென்றோ கவர்ந்து வருதலைதான் ஆநிரை கவர்தல் என்பர். இவ்வாறு ஆநிரைகளைக் கவர்ந்து சென்றதை அறிந்த பகைவர், இவர்களுடன் போரிட்டு ஆநிரைகளை மீட்டுச் செல்வதையே ஆநிரை மீட்டல் என்பர். ஆநிரை மீட்டலையும் வீரத்தின் செயலாகவும் மக்களைப் பாதுகாக்கும் அரசனின் கடமையாகவும் கருதப்படுகின்றது.

**தொல்காப்பியத்தில் நிரை கவர்தல், மீட்டல்**

காலத்தால் முற்பட்ட இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்டு விளங்குகின்றது. அதில் பொருளதிகாரத்தின் புறத்திணையியல் என்னும் பகுதியில் தமிழரின் போர் மரபு பற்றிய இலக்கணம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் புறத்திணைகளை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழாகப் பகுத்து விளக்குகின்றது. அவற்றுள் ஆநிரை கவர்தல், மீட்டல் ஆகிய இரு செயல்பாட்டையும் வெட்சித் திணையில் பேசுகிறது. மேலும், புறத்திணையான வெட்சியை அகத்திணையான குறிஞ்சிக்குப் புறனாகக் குறிப்பிடுவதை,

**“வெட்சிதானே குறிஞ்சியது புறனே”** [2]

**(தொல். பொருள். புறம் - நூ.59)**

என்ற நூற்பா மூலம் அறிய முடிகிறது. வெட்சி குறிஞ்சிக்குப் புறனாக அமையின் ஆநிரை கவர்தல், மீட்டல் ஆகிய இரு செயல்பாடுகளும் குறிஞ்சித் திணை சார்ந்தவையாகிறது. பொதுவாக, ஆநிரை வளர்ப்பு என்பது முல்லை நிலத்துக்குரிய தொழிலாகும். அதேபோல் ஆநிரைகளைக் கவர்ந்து செல்லுதல் பாலை நில வேட்டுவர்க்குரிய செயலாகும். எனவே வெட்சி குறிஞ்சிக்குப் புறனாக அமையுமா? என்ற வினா எழக்கூடும். ஆனால், குறிஞ்சியின் உரிப்பொருளாகக் களவொழுக்கம்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

அமைகின்றது. அதேபோல் ஆநிரை கவர்தல் என்பதும் களவு சார்ந்ததாகிறது. மேலும், குறிஞ்சிக்கும் வெட்சிக்கும் உரிய பொழுதும் யாமம் ஆகும். எனவே, வெட்சியும் குறிஞ்சியும் காலத்தின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும் ஒழுக்கத்தின் அடிப்படையிலும் ஒத்த இயைபுடையதாக அமைகின்றன. சூடும் பூவும் (வெட்சிப்பூ, கரந்தைப்பூ) குறிஞ்சி நிலத்துப் பூவாகும். இதன் பொருட்டே தொல்காப்பியர் வெட்சியைக் குறிஞ்சிக்குப் புறனாகக் கூறியிருக்க வேண்டும் என்று கருத இடமேற்படுகிறது.

**"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்"** [3]

**(தொல். பொருள். புறம் நூ.60)**

வேந்தனால் ஏவிவிடப்பட்ட படைமறவர் வேற்றுநாட்டிற்குச் செல்வர். பிறர் அறியாதபடி அங்குள்ள ஆநிரைகளைக் களவினால் கவர்ந்து வருவர். அவற்றை உரிமையுடையோர் மீட்டுச் செல்லாதபடி பாதுகாப்பர். இவ்வாறு செய்யும் செயலே வெட்சி எனும் புறத்திணை ஆகும். இத்தகைய வெட்சித்திணையில் தொல்காப்பியர் முதலில் படை இயங்கு அரவம் முதல் கொடை வரையிலான பதினான்கு துறைகளைக் கூறுகிறார். பின்னர் குடிநிலை, கொற்றவைநிலை ஆகியன இரண்டையும் வெட்சியின் பார்ப்பட்டதாகக் கூறுகிறார்.

பின்னர் வெட்சியின் பகுதியாகிய கரந்தைக்குரிய காந்தள் முதல் பிள்ளையாட்டு வரையிலான பதினைந்தும் நிரை மீட்டலுக்கு உரியவையாகவும், காட்சி முதல் வாழ்த்தல் வரையிலான ஆறும் ஆநிரை மீட்கச் சென்று உயிர்விட்ட மறவனுக்கு எடுக்கப்படும் நடுகல்லோடு தொடர்புடையவையாகவும் கூறியுள்ளார்.

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டு அயர்ந்த காந்தளும்"** [4]

**(தொல். பொருள். புறம் நூ.61)**

**புறப்பொருள் வெண்பாமாலை**

புறப்பொருள் இலக்கணத்தைச் சிறப்பித்துக் கூறும் இலக்கண நூல்களான தொல்காப்பியம், பன்னிருபடலம் ஆகியவற்றையடுத்து குறிப்பிடத்தக்க ஒரு நூலாக விளங்குவது புறப்பொருள் வெண்பாமாலையாகும். இந்நூல் பன்னிருபடலத்தை அடியொற்றி எழுதப்பட்டது என வெண்பாமாலையின் சிறப்புப் பாயிரம் எடுத்துரைக்கிறது. மேலும், இந்நூல் புறத்திணைகளைப் பன்னிரண்டு படலங்களாகப் பகுத்து விளக்குகின்றது. அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை. இவற்றுள்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

வெட்சி முதல் தும்பை வரையிலான ஏழினைப் புறம் என்றும் வாகை முதல் பொதுவியல் வரையிலான மூன்றும் புறப்புறம் என்றும் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் அகப்புறம் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் ஆநிரை கவர்தலை வெட்சித் திணையிலும் ஆநிரை மீட்டலைக் கரந்தைத் திணையிலும் பேசுகிறது.

ஆநிரையைக் கைப்பற்றக் கருதும் வெட்சித் திணை இரண்டு வகைப்படும். அவை, மன்னுறுதொழில், தன்னுறுதொழில்.

**“வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்**
**சென்று இகல் முனை ஆதந் தன்று”** [5]

என்று அரசன் தன்னுடைய வீரர்களை நோக்கி ஆநிரைகளைக் கவர்ந்து வருமாறு கட்டளையிட அவ்வீரர்கள் பசுக்களைக் கவர்ந்து வருதலே மன்னுறு தொழிலாகும். அவ்வாறு, அரசனின் கட்டளையின்றி மறவர்கள் அரசனது குறிப்பறிந்து தாமே சென்று ஆநிரைகளைக் கவர்ந்து வருதலே தன்னுறு தொழிலாகும். இத்தகைய வெட்சித் திணையானது வெட்சி அரவம் முதல் வெறியாட்டு வரையிலான 19 துறைகளைக் கொண்டு விளக்கப்படுகிறது. இதனை,

**“வெட்சி வெட்சி அரவம் விரிச்சி செலவு**
**வேயே புறத்திறை ஊர்கொலை, ஆகோள்…”** [6]

என்ற நூற்பா மூலம் அறியலாம். வெட்சியாரால் கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரைகளை இடைமறித்து மீட்டுச் செல்லும் பொருட்டு மேற்கொள்கின்ற ஒழுக்கமாகிய கரந்தைப் படலமானது, கரந்தை அரவம் முதல் குடிநிலை வரையிலான பதிமூன்று துறைகளால் விளக்கப்படுகிறது. இதனை,

**“கதமலி கரந்தை கரந்தை அரவம்**
**அதரிடைச் செலவே அரும்போர் மலைதல்…”** [7]

**ஒப்பீட்டு நோக்கில் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலையில் - வெட்சி**

தொல்காப்பியர் தம்முடைய பொருளதிகாரத்தில் புறத்திணை இலக்கணத்தை, ஏழு திணைகளாகப் பகுத்து ஓர் இயலில் (புறத்திணையியல்) சுருக்கமாகவும் தெளிவுபடவும் எடுத்துரைக்கிறார். ஆனால், புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணையை பன்னிரண்டு (12) திணைகளாகப் பகுத்து விரிவுபடப் பேசுகிறது. மேலும், தொல்காப்பியர் நிரை மீட்டலாகிய செயலைத் தனித்துக் (கரந்தையாக) கூறாமல் வெட்சித் திணையினுள் அடக்கிக் கூறுகிறார். ஆனால், பன்னிருபடலத்தை அடியொற்றி செல்லும் புறப்பொருள் வெண்பாமாலையானது நிரை கவர்தலை வெட்சி எனவும் நிரை மீட்டலைக் கரந்தையெவும் இரண்டாகப் பிரித்துப் பேசுகிறது.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

தொல்காப்பியம் மன்னர் பணிப்ப மறவர் நிரைகவரச் செல்வதாகக் கூறுகிறது. ஆனால், புறப்பொருள் வெண்பாமாலையானது மன்னன் பணிப்பவும் பணிப்பின்றி இருக்க அவன் குறிப்பறிந்து மறவர் தாமே சென்று நிரை கவர்தலாகிய (மன்னுறு தொழில், தன்னுறு தொழில்) செயலில் ஈடுபடுவதாகவும் கூறுகிறது.

**வில்லிபாரதத்தில் நிரை கவர்தலும், மீட்டலும்**

வியாச பாரதத்தையும் பாலபாரதத்தையும் தழுவி தமிழ் மரபுக்கு ஏற்ப எழுதப்பட்ட காவியமாக விளங்குவது வில்லிபாரதமாகும். இவ்வில்லிபாரதத்தில் ஆநிரை கவர்தலும், மீட்டலுமாகிய நிகழ்வுகள் ஆதிபருவம் - அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கத்திலும், விராடபருவம் - நிரைமீட்சிச் சருக்கத்திலும் இடம்பெறுகின்றன. இதில் அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கத்தில் இடம் பெறும் ஆநிரை கவர்தல் மற்றும் மீட்டலானது மிகச்சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது, ஆநிரைகளைக் கவர்ந்து விட்டதாக அந்தணன் கூறக் கேட்ட அருச்சுனன் படைக்கருவிகளோடு விரைந்து சென்று வேடர்களை வென்று ஆநிரைகளை மீட்டுக் கொண்டு வந்தான் என்று கூறப்பட்டுள்ளது. விராட பருவம் நிரைமீட்சிச் சருக்கத்தில் கௌரவர்கள் விராட மன்னனின் ஆநிரையைக் கவர்வதும், அதனை விராடனின் படைகள் மீட்பதுமான நிகழ்வுகள், சில இலக்கண அடிப்படையில் அமைந்துள்ளன.

**வில்லிபாரதத்தில் வெட்சிப்போருக்கான நோக்கம்**

பொதுவாக, இலக்கண நூல்கள் கூறும் வெட்சி என்பது பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்து, அவரைப் போருக்குத் தூண்டும் போர் முறையாகும். அதாவது, ஆநிரை அக்காலத்தில் செல்வத்தின் அடையாளமாக விளங்கியதால் அதனைக் கவர்வது பகைவரின் பொருளாதார வலிமையைக் குறைப்பதோடு அவரை நேரடி போரில் ஈடுபட செய்கிறது. இதன் மூலம் பகைவரின் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்துதல் தன் நாட்டின் செல்வத்தைப் பெருக்குதல் வீரத்தை வெளிப்படுத்துதல் மற்றும் புகழ் பெறுதல் போன்ற நோக்கத்தோடு வெட்சிப் போர் நிகழ்கிறது. வியாசபாரதம் மற்றும் பாலபாரதத்திலும் ஆநிரை கவர்தல் இதே மரபை ஒட்டியே அமைந்துள்ளன. வில்லிபுத்தூராரின் பாரதத்தில் வெட்சிப் போர் என்பது வெறும் போரைத் தொடங்குவது மட்டுமல்லாது அஞ்ஞானவாச மேற்கொண்டிருந்த பாண்டவர்களை வெளிக்கொணர்வதற்கான அரசியல் தந்திரமாகவும் விளங்குகிறது.

**வில்லி பாரதத்தில் வெட்சிப்போர்**

**1. தன்னுறு தொழில்**

விராட பருவம் நிரைமீட்சிச் சருக்கத்தில் பாண்டவர்களுடைய அஞ்ஞானவாச காலத்தின்

,| Copyright © Author(s)

இறுதியில் துரியோதனன் பாண்டவர்கள் விராட நகரத்தில் இருக்கலாமென ஒருவாறு ஊகித்து உணர்ந்து அவர்களைக் கண்டுபிடிக்க விராட நகரத்துப் பசுக்கூட்டங்களைக் கவர்ந்துவர திட்டமிட்டான்.

**"தக்கோர் சொற்கள் கேளாத துரியோதனன் சொல்லினான்" [8]**

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.8)**

என்ற அடியில் பெரியோர்களின் நல்ல வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படி நடக்காத துரியோதனன் கூறுவதாக வில்லிபுத்தூரார் குறிப்பிடுகிறார். இது தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் தன்னுறு தொழிலாகும்.

**2. வெட்சி அரவம்**

துரியோதனனின் ஆணைக்கிணங்க திரிகர்த்த தேசத்து அரசன் சுசர்மாவின் தலைமையில் படை தயாரானது. சுசர்மனும் மேம்பட்ட வீரர்கள் அணியும் வலிமையைக் குறிக்கும். வெட்சி மலர்மாலையைச் சூடிய தோள்களை உடையவனாய் எல்லாத்திக்குகளிலும் ஓசை உண்டாகுமாறு முரசுகள் ஒலிக்கச் சென்றான். இதனை,

**"மிக்கோர் மிலைச்சும் செழுந்தாம விறல் வெட்சி மிலை தோளினான்**
**திக்கு ஓதை எழ விம்ம முரசங்கள் அரசு ஆன திரிகத்தர் கோன்" [9]**

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.8)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறு திரிகர்த்தராசன் சென்றதை வெட்சி அரவம் என்னும் புறப்பொருள் வெண்பாமாலையின் துறையாகக் கொள்ளலாம். இதனைத் தொல்காப்பியம் படையியங்கு அரவம் எனக் கூறுகிறது.

**3. செலவு**

விராடனின் ஆநிரைகளைக் கவர திரிகர்த்த அரசனான சுசர்மன் ஓர் அக்ரோணி என்று சொல்லப்படுகின்ற, தேர் - இருபத்தோராயிரத்து எண்ணூற்றெழுபது, யானை - இருபத்தோராயிரத்து எண்ணூற்றெழுபது குதிரை - அறுபத்தைந்தாயாயிரத்து நூற்றுப்பத்து, காலாள் - லட்சத்து ஒன்பதினாயிரத்து முன்னூற்றைம்பது, என மொத்தம் இரண்டு லட்சத்து பதினெட்டாயிரத்து இருநூறு என்ற எண்ணிக்கையிலான படையுடன் விராட நாட்டின் தென் திசைக்குச் சென்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இது, தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் செலவு என்னும் துறையாகும்.

**"திக்கு ஓதை எழ விம்ம முரசங்கள் அரசு ஆன திரிகத்தர் கோன்**
**அக்ரோணி படையொடு போய்…" [10]** **(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.8)**

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

**4. புறத்திறை**

திரிகர்த்த மன்னன் தலைமையிலான படைத் தோற்கடிக்கப்பட்டதை அறிந்தான் துரியோதனன். எட்டுத்திக்குகள் எங்கும் ஒலிபோய் தாக்கும்படி பேரிகைகள் ஒலிக்க பின் இரவிலே புறப்பட்டு வந்து விராட நகரத்தை வடக்குத் திசையில் முற்றுகையிட்டான்.

**"கெட்ட வெம்படை கெட்டமை சுயோதனன் கேளா**
**முட்ட எண் திசா முகங்களும் பேரிகை முழங்க**
**தொட்ட பைங் கடல் சூரியன் தோன்றும் முன் தோன்றி**
**வட்ட மாமதில் விராடன் ஊர் வடதிசை வளைத்தான்."** [11]

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.24)**

இவ்வாறு பகைவரின் அரணத்தை வளைத்து முற்றுகையிடுவது தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் கூறும் புறத்திறை என்னும் துறையாகும்.

**5. ஊர்கொலை**

துரியோதனன் விராட நாடு முழுவதையும் சூழத் தன் படையைப் பரவச் செய்தான். விளைகின்ற மிக்க நெற்பயிர்களையெல்லாம் தீயிட்டுக் கொளுத்தச் செய்தான்.

**"வளைய நாடு எல்லாம் மன்னவன் வருதினி பரப்பி**
**விலையும் நன்பெரு விளைவு எலாம் வெங்கனல் கொளுத்தி"** [12]

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.25)**

இந்நிகழ்வானது வெட்சி மறவர் பகைவரின் ஊரின்மீது சினந்து தீயிட்டு அழித்தலாகிய ஊர்கொலை என்னும் துறையாகும். ஊர்கொலை என்னும் துறை தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய இரு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6. ஆகோள்**

விராட நகரின் பகுதிகளைத் தீயிட்டுக் கொளுத்திய துரியோதனனின் படையினர் அசைந்து ஒலிக்கும் பெரிய மணிகளையுடைய பசுக்கூட்டத்தைக் கவர்ந்து சென்றதை,

**"அளையும் மாமணி ஆநிரை கவர்தல்"** [13]

**(விராடபருவம் நிரைமீட்சிச் சருக்கம், பா.25)**

என்ற அடியின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இந்நிகழ்வைத் தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் குறிப்பிடும் "ஆகோள்" என்னும் துறையாகக் கருதலாம்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

இவ்வாறு வில்லிபாரதத்தில் வெட்சிக்குரிய தன்னுறு தொழில் நடைபெற்றுள்ளது. மேலும், அதன் துறைகளான வெட்சி அரவம் அல்லது படைஇயங்கு அரவம், செலவு, புறத்திறை, ஊர்கொலை, ஆகோள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

**வில்லி பாரதத்தில் கரந்தைப் போர்**

**1. கரந்தை அரவம்**

பசுக்கூட்டங்களைக் காத்த இடையர் விராட மன்னனை வணங்கி திரிகர்த்தன் முதலியோர் பசுக்களைக் கவர்ந்துக்கொண்டு போய்விட்ட செய்தியைக் கூறினர். இதைக் கேட்ட விராட மன்னன்,

**“பருமித்த மதயானை தேர் வாசி ஆள் இன்ன பண் செய்யுமென்று**

**உரும் மிக்க முகில்போல் உரைத்தான் ஓர் அக்ரோணி உள தானையான்” [14]**

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.10)**

என்று தனது மிக்க மதத்தையுடைய யானைகளும், தேர்களும், குதிரைகளும், காலாட்கள் என்ற நால்வகைப் படைகளையும் அணிவகுத்து போருக்குத் தயார் செய்யுங்கள் என்று ஆணையிட்டான்.

**“நிரை கோள் கேட்டுச் செய்தொழில் ஒழிய**

**விரைவனார் குழூஉம் வகை உரைத்தன்று.” [15]**

வெட்சியாரால் கவரப்பட்ட ஆநிரைகளை மீட்க ஒன்று கூடிய கரந்தையர்கள் கொண்ட போர் எழுச்சியினால் ஏற்பட்ட ஓசையே புறப்பொருள் வெண்பாமாலைக் குறிப்பிடும் கரந்தையரவம் என்னும் துறையாகும்.

**2. அதரிடைச் செலவு**

நிரைமீட்கச் செல்லும் விராடனது படைகள் செல்வதால் எழுப்பப்பட்ட மிக்க புழுதி வானத்தை மறைக்கவும், பல வாத்தியங்களின் ஒலி உண்டாகவும், வலிய படை அணிவகுத்துச் செல்லவும் புறப்பட்டான். புறப்பட்டுப் பசுக்களைக் கவர்ந்து சென்ற திரிகர்த்தன் படையை நெருங்கிச் சென்றான். இதனை,

**“ஒண் துளி வானம் புதைக்க பல் இய சாலம் ஒலிபட்டிட**

**தின் தூசி அணியாக நிரை கொண்ட வெஞ்சேனை சென்று எய்தினான்.” [16]**

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.11)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. இவ்வாறு ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வெட்சி மறவரைப் பின்பற்றி கரந்தை மறவர் செல்லுவது புறப்பொருள் வெண்பாமாலைக் குறிப்பிடும்

அதரிடைச் செலவு என்னும் துறையாகும்.

**3. போர் மலைதல்**

ஆநிரைகளை மீட்க பேடி வேடமிட்ட பிருகந்நளை ஆகிய அருச்சுனன் தவிர்த்த பாண்டவர்கள் நால்வரும் விராடனுடன் போர்க்களத்துக்குச் சென்றனர். பசுக்களைக் கவர்ந்து சென்ற திரிகர்த்தன் படையும், அதனை அழித்து மீட்கச் சென்ற விராடனின் படையும், தாம் வெற்றி கொள்ள வேண்டும் என்று விருப்பம் மிக்க ஒன்றுடன் ஒன்று போர்செய்தன. இதனை,

**"கெட்பு ஏரி நிறை கொண்ட வெஞ்சேனையும் செல் கொடுஞ் சேனையும்**
**பெட்பு ஏரி அமர் செய்ய..." [17]**

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.12)**

என்ற பாடல் அடிகளால் அறியமுடிகிறது. இந்நிகழ்வு புறப்பொருள் வெண்பாமாலை கூறும் போர் மலைதல் என்னும் துறையாகும்.

**4. ஆர்அமர் ஓட்டல்**

வெற்றிக் கொள்ளும் முனைப்புடன் போரிட்ட இரு படைகளுள் முன்னே வந்த திரிகர்த்தனின் படைப் புறமுதுகிட்டு ஓடியது. இதனை,

**"பெட்பு ஏரி அமர் செய்யு முன்னிட்ட குருசேனை பின்னிட்டதே" [18]**

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.12)**

என்ற பாடலடியால் அறியமுடிகிறது. இது தொல்காப்பியம் கூறும் "ஆர் அமர் ஓட்டல்" என்னும் துறையாகும். அதாவது அரிய போர்க்களத்தில் வெட்சி மறவரைப் புறமுதுகிட்டுத் தோற்றோடச் செய்தல் என்பதாகும்.

**5. நெடுமொழி கூறல்**

தென்திசைக்குச் சென்ற விராடனது படை, மீண்டும் துரியோதனன் இரண்டாவதாகப் படையெடுத்து வரக்கூடுமென அங்கேயே காத்திருந்தது. இந்நிலையில் தான் துரியோதனன் வடதிசையை அடைந்து பசுக்களைக் கவர்ந்து சென்றான். இச்செய்தியை இடையர்கள் விராடனின் மகனாகிய உத்தரனிடம் கூறினர். இதை கேட்ட சிறுவனான உத்தரன் செய்வதறியாது தவித்தான். அப்போது வண்ணமகளான திரௌபதி, பிருகந்நளை அருச்சுனனுக்குத் தேரோட்டியவள் என்று கூறினாள். எனவே, அவளை சாரதியாகக் கொள்வாய் என்றும் உத்தரனுக்கு அறிவுறித்தினாள். உத்தரனும் பிருகந்நளையைச் சாரதியாக ஏற்று வடதிசை நோக்கி போருக்குச் சென்றான். ஆனால், அங்கு பரவியிருந்த படைகளைக் கண்டு அஞ்சி நடுங்கினான். பின் பிருகந்நளையான அருச்சுனன் அவனைத் தெளிவிக்கத் தெளிந்தான்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

அப்போது பேடிகோலத்திலிருந்து அருச்சுனன் பகைவர் தன்னிடம் மிகுந்திருக்கும் பெண்மையை ஆண் தன்மையாய் பாராட்டும்படி அவனுடைய கொடிய வில்லை வளையல் அணிந்த கைகளில் கொண்டு உத்தரனைப் பார்த்து

**"கோடி அம்புகள் ஓர் ஒரு தொடையினில் கோத்து**
**வீடுவிப்பன் நீ அஞ்சிடா விடுக தேர்" [19]**

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.48)**

இவ்வாறு ஒரு வீரன் தன் ஆற்றலின் பெருமையைத் தானே எடுத்துக்கூறுதல் தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலைக் கூறும் நெடுமொழிக் கூறல் எனும் துறையாகும்

**6. ஆபெயர்த்துத் தருதல்**

தெற்கு திசையில் புறமுதுகிட்டு ஓடிய திரிகர்த்தன் மீண்டும் வந்து விராடனுடன் போர் செய்தான். அதில் விராடனை வென்று, அவனைத் தனது தேரில் பிணைத்தான் திரிகர்த்தன். அதனைக் கண்ட கங்கன் எனும் தருமர் தனது தம்பி பலாயனனான வீமனைக் கண் அசைவால் விராடனை விடுவிக்கும்படி குறிப்புக் காட்டினான். வீமனும் திரிகர்த்தனை வென்று, திரிகர்த்தனையும் வில்லுடன் பிடித்துக்கொண்டு விராடனை விடுவித்தான். திரிகர்த்த மன்னனைப் பிடித்துக் கட்டியதைப் பார்த்துக் குதிரை செலுத்துதலில் வல்ல தாமக்கிரந்தி என்னும் பெயர் கொண்ட நகுலன், திரிகர்த்தர் படையில் உள்ள பதினாயிரம் குதிரைகளைக் கவர்ந்துக் கொண்டான். பசுக்களைக் காக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள தந்திரிபாலனான சகாதேவன் பகைவர் கவர்ந்துக் கொண்டு போன பசுக்களைத் திரும்ப மீட்டு வந்தான். இதனை,

**"சேவலான் என தயித்தியன் அனைய அத்திகத்தர்**
**காவலானனை அக் கால்மகன் பிணித்தமைக் கண்டு**
**மாவலான் வயமாப் பதினாயிரம் வெளவ**
**கோவலான் அவன் கொண்ட கோ மீளவும் கொண்டான்." [20]**

**(விராடபருவம், நிரைமீட்சிச் சருக்கம், பா.20)**

என்ற பாடலடிகளால் தெரிந்துக்கொள்ள முடிகிறது. இவ்வாறு திரிகர்த்தராசன் கவர்ந்துச் சென்ற பசுக்களை விராடனது படை மீட்டு வந்த செயலானது, தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வெட்சி மறவர் கவர்ந்து சென்ற ஆநிரையைக் கரந்தையர் மீட்டு வருதலாகிய "ஆ பெயர்த்துத் தருதல்" என்னும் துறையாகும்.

மேலும், வட திசையில் அருச்சுனனின் சொல் கேட்டுத் தெளிந்த உத்தரன் தேரோட்ட, அருச்சுனன் போரிட்டுப் பசுக்கூட்டத்தை மீட்டுக் கொண்டுவந்தான். இதனை,

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

**"மான மா முடி மன்னரை விலக்கி வில் விரைந்து**
**கோ நிரை குலம் கொண்டுபோம் கோ நிரை துரந்து**
**போன பேடி வெம் பூசலும் பொழுதுறப் பொருது**
**தூ நிறத்து இளங் கன்றுடைத் தொறுக்களும் மீட்டான்."** [21]

**(விராடபருவம் நிரைமீட்சிச் சருக்கம், பாடல்.55)**

மேற்கண்ட பாடலில் போருக்கு வந்த பேடியாம் அருச்சுனன், பெருமையும் வீரமும் உடைய மன்னர்களை விலக்கி, மிக விரைந்து, பசுக்கூட்டத்தைக் கவர்ந்து செல்லுகின்ற அரச பரிவாரத்தைத் துரத்திச் சென்று, கொடிய போரைக் குறுகிய கால அளவில் செய்து, தூய தன்மையுடைய இளங்கன்றுகளுடன் பசுக்கூட்டத்தையும் மீட்டான் என்ற செய்தி இடம்பெற்றிருப்பதை அறியமுடிகிறது. இதுவும் தொல்காப்பியம் குறிப்பிடும் ஆபெயர்த்துத் தருதல் என்னும் துறையாகும். இவ்வாறு வில்லிபாரதத்தில் கரந்தைத் துறைகளாகிய கரந்தை அரவம், அதரிடைச் செலவு, போர் மலைதல், ஆர்அமர் ஓட்டல், நெடுமொழிக் கூறல், ஆபெயர்த்துத் தருதல் போன்ற துறைகள் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

**முடிவுரை**

பழங்காலந்தொட்டு செல்வமாகக் கருதப்படக்கூடியவையாக ஆநிரைகள் விளங்குவதை நம்மால் காணமுடிகிறது. அத்தகைய செல்வத்தைக் கவர்தல் என்பதும் அதனை மீட்டுச் செல்லுதல் என்பதும் பெரும் நிகழ்வாக இருந்திருப்பதை வில்லிபுத்தூராரின் வில்லிபாரதம் வழி நம்மால் அறியமுடிகிறது. தொல்காப்பிய வழியிலும் புறப்பொருள் வெண்பாமாலையின் நெறிப்படியும் வில்லிபாரதத்தில் ஆநிரை கவர்தல், மீட்டல் நிகழ்வானது எவ்வாறெல்லாம் பொருந்தி வந்துள்ளன என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை விளக்கும் படிநிலையைப் பின்பற்றாமல் இலக்கியத்தின் போக்கிற்கு ஏற்ப துணைப்புரியும் துறைகளை மட்டும் பயன்படுத்தி தம் இலக்கியத்தை அமைத்துள்ளார் என்பதை நம்மால் இவ்வாய்வு கட்டுரை வழி உய்த்துணர முடிகிறது. மேலும், இதற்கு சிறந்த உதாரணமாக ஆநிரை கவர்தல் தொல்காப்பியத்திற்கும் புறப்பொருள் வெண்பாமாலைக்கும் பொதுவான துறைகளையே கையாண்டிருப்பதும், ஆநிரை மீட்டலின் போது வில்லிபாரதத்தில் இடம்பெறும் துறைகளாகக் கரந்தையரவம், அதரிடைச்செலவு, போர் மலைதல் போன்றவை புறப்பொருள் வெண்பாமாலையிலும், ஆர்அமர் ஓட்டல், ஆபெயர்த்துத் தருதல் போன்ற துறைகள் தொல்காப்பியத்திலும் இடம்பெற்று வருவதைக் காணமுடிகிறது. இங்ஙனம், தொல்காப்பியத்திலிருந்து ஐயனாரிதனார் திணை அமைப்பு முறையை விரிவாக்கம் செய்த நிலையில் புறஇலக்கணத்தை அமைத்திருந்தாலும், பாரதத்தில் வில்லிப்புத்தூரார் கையாண்ட விதம் இலக்கியப் போக்கிற்கு ஏற்பவே மூல நூலுடன் ஒத்து தம் இலக்கியத்தைக் கட்டமைத்துள்ளார் என்பதை நம்மால் அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு – 2003. (ப.188)

2. பேரா. ச. திருஞானசம்பந்தம் (உரையாசிரியர்) , தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு, முதற் பதிப்பு – 2020. (ப.46)

3. மேலது (ப.47)

4. மேலது (ப.51)

5. பேரா. ச. திருஞானசம்பந்தம் (உரையாசிரியர்) , புறப்பொருள் வெண்பாமாலை தெளிவுரை, கதிர் பதிப்பகம், திருவையாறு, முதற் பதிப்பு – 2006. (ப.14)

6. மேலது (ப.13)

7. மேலது (ப.36)

8. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் (உரையாசிரியர்), வில்லிபுத்தூரார் இயற்றிய மகாபாரதம், உமா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2013. (ப.141)

9. மேலது (ப.141)

10. மேலது (ப.141)

11. மேலது (ப.156)

12. மேலது (ப.157)

13. மேலது (ப.157)

14. மேலது (ப.143)

15. பேரா. ச. திருஞானசம்பந்தம் உரையாசிரியர், புறப்பொருள் வெண்பாமாலை தெளிவுரை, கதிர் பதிப்பகம், திருவையாறு, முதற் பதிப்பு – 2006. (ப.16)

16. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் (உரையாசிரியர்), வில்லிபுத்தூரார் இயற்றிய மகாபாரதம், உமா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2013. (ப.145)

17. மேலது (ப.146)

18. மேலது (ப.146)

19. மேலது (ப.179)

20. மேலது (ப.152)

21. மேலது (ப.188)

References

[1]. Kathiraivel Pillai, N. *Tamil Mozhi Agarathi*. 2nd ed., Saradha Pathipagam, 2003, p. 188.
[2]. Thiru Gnanasambandham, S., commentator. *Tolkappiyam Porulathikaram Moolamum Urayum*. 1st

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

ed., Kathir Pathipagam, 2020, p. 46.
[3]. Thiru Gnanasambandham, p. 47.
[4]. Thiru Gnanasambandham, p. 51.
[5]. Thiru Gnanasambandham, S., commentator. *Purapporul Venbamalai Thelivurai*. 1st ed., Kathir Pathipagam, 2006, p. 14.
[6]. Thiru Gnanasambandham, *Purapporul Venbamalai Thelivurai*, p. 13.
[7]. Thiru Gnanasambandham, *Purapporul Venbamalai Thelivurai*, p. 36.
[8]. Gopalakrishnamachariyar, V. M., commentator. *Villiputhurar Iyatriya Mahabharatam*. 1st ed., Uma Pathipagam, 2013, p. 141.
[9]. Gopalakrishnamachariyar, p. 141.
[10]. Gopalakrishnamachariyar, p. 141.
[11]. Gopalakrishnamachariyar, p. 156.
[12]. Gopalakrishnamachariyar, p. 157.
[13]. Gopalakrishnamachariyar, p. 157.
[14]. Gopalakrishnamachariyar, p. 143.
[15]. Thiru Gnanasambandham, *Purapporul Venbamalai Thelivurai*, p. 16.
[16]. Gopalakrishnamachariyar, p. 145.
[17]. Gopalakrishnamachariyar, p. 146.
[18]. Gopalakrishnamachariyar, p. 146.
[19]. Gopalakrishnamachariyar, p. 179.
[20]. Gopalakrishnamachariyar, p. 152.
[21]. Gopalakrishnamachariyar, p. 188.

Tamilmanam

, | Copyright © Author(s)